

தென்காசி மாவட்டம், தென்காசி ஒன்றியம் ஆயிரப்பேரி ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் ராமகிருஷ்ணன் உடல் நலக்குறைவு காரணமாக 11.05.2026 அன்று அவரது இல்லத்தில் இயற்கை எய்தினார். அன்னாரது உடலுக்கு கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் தென்காசி தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் பொ.சிவபத்மநாதன், முன்னாள் ஒன்றிய செயலாளர் காசிதர்மம் துரை, கடையம் மேற்கு ஒன்றியச் செயலாளர் ஜெயக்குமார், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் சாக்ரடீஸ் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி தெற்கு பகுதி திமுக சார்பில் தண்ணீர் பந்தல் திறப்பு விழா ஆவடியில் நடைபெற்றது இதில் மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் கலந்துகொண்டு தண்ணீர் பந்தலை திறந்து வைத்து பொதுமக்களுக்கு இளநீர் நீர்மோர் பல்வேறு பழம் வகைகள் குளிர்பானங்கள் வழங்கினார். உடன் ஆவடி மேயர் ஜி.உதயகுமார், பகுதி செயலாளர் ஜி.ராஜேந்திரன், நிர்வாகிகள் ருக்கு, யுவராஜ், கீதா, யுவராஜ் உள்பட பலர் உள்ளனர்.

### தென்காசி மாவட்டம் ஆயிரப்பேரி

# ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் ராமகிருஷ்ணன் மறைவு!

## அன்பகம் கலை – பொ.சிவபத்மநாதன் அஞ்சலி!

தென்காசி, மே 13 -

தென்காசி தெற்கு மாவட்டம் தென்காசி ஒன்றியம் ஆயிரப்பேரி ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் ராமகிருஷ்ணன் அவர்கள் உடல்நிலை குறைவு காரணமாக அன்னாரது இல்லத்தில் வைத்து நேற்று முன்தினம் (11.05.2026 - திங்கட் கிழமை ) மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். கருப்பு சிவப்பு அடையாளமாக வாழ்ந்து மறைந்தவர் ராமகிருஷ்ணன் அவர்கள் ஆவார். இதுபற்றிய தகவல் அறிந்ததும் கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, தென்காசி தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் பொ. சிவபத்மநாதன் ஆகியோர் ஆகியோர் அன்னாரது இல்லத்திற்கு சென்று மறைந்த ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் ராமகிருஷ்ணன் அவர்களின் உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தனர்.

தென்காசி தெற்கு மாவட்டம் தென்காசி ஒன்றியம் ஆயிரபேரி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ராமகிருஷ்ணன் அவர்கள் நேற்று முன்தினம் (11ம் தேதி திங்கட் கிழமை) உடல் நலக்குறைவு காரணமாக அவரது இல்லத்தில் இயற்கை எய்தினார்.

இவர் கழகத்தின் மீது மிகுந்த பற்று கொண்டவர். நெல் வியாபாரம் செய்து வந்த மறைந்த ராமகிருஷ்ணன் அவர்கள் இரண்டு முறை ஊராட்சி மன்ற தலைவராக சிறப்பாக பணியாற்றியவர் ஆவார். குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால் கருப்பு சிவப்பு அடையாளம் இல்லாமல் எங்கும் செல்ல மாட்டார். அப்படி கழகத்திற்காக உழைத்த, பாடுபட்ட, கழகத்தின் உயிரின் அடையாளமாக வாழ்ந்த ராமகிருஷ்ணன் அவர்கள் இயற்கை எய்தினார்.

இது பற்றிய தகவல் கிடைத்ததும் கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, முன்னாள் தென்காசி தெற்கு மாவட்டச் செயலாளர் பொ.சிவபத்மநாதன் பொதுக்குழு உறுப்பினர் சாமிதுரை, கடையம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஜெயக்குமார், கடையநல்லூர் முன்னாள் ஒன்றிய செயலாளர் காசிதர்மம் துரை, மாவட்ட கவுன்சிலர் சாக்ரடீஸ், கல்லூரணி ஊராட்சி மன்ற தலைவர் ராஜ்குமார், தொழிலதிபர் வினோத், கழக மாநில பேச்சாளர் முத்துவேல், பாட்டபத்து கிளை செயலாளர் சண்முகவேல், ஆயிரபேரி கிளை செயலாளர் பட்டுமுத்து என்ற ரமேஷ், வழக்கறிஞர் காளிதாஸ், பண்ணை தெரு கிளைச் செயலாளர் செல்லத்துரை, கீழப்பாவூர் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் ஹரி கிருஷ்ணன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உடன் சென்று மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

மறைந்த ராமகிருஷ்ணனை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை ஆறுதல் கூறினார்.

### தியாகராயர் நகர் தொகுதியில் போட்டியிட்ட கழக வேட்பாளர்

# ராஜா அன்பழகன் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்!

## கே.ஏழுமலை எம்.சி. – கோ.சு.மணி அறிக்கை!

சென்னை,மே.13-

சென்னை தென்மேற்கு மாவட்டம் தியாகராய நகர் தொகுதி 130,1 31அ, 132, 132அ, 134, 134அ, 131 ஆகிய வட்டங்களில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கழக வேட்பாளர் ராஜா அன்பழகன் இன்று 13.05.2026 புதன்கிழமை மாலை 5.00 மணி அளவில் மேற்கண்ட வட்டங்களில் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்த வாக்காளர்களுக்கு வீதி வீதியாக சென்று மக்களை சந்தித்து நன்றி தெரிவிக்கிறார்.

130வது வட்ட கழக செயலாளர் டி.கமல் தலைமையில் மாலை 5.00மணி அளவில் வடபழனி பெரியபாளையத்தம்மன் கோயில் அருகில் இருந்து துவங்கி மசூதி தெரு பிள்ளையார் கோவில் தெரு, கங்கை அம்மன் கோவில் தெரு, ஆண்டவர் நகர் 3.5வது தெரு வழியாக வந்து ஆற்காடு சாலையில் முடிகிறது.

131(அ) வட்ட கழக செயலாளர் எம். கிருஷ்ணமூர்த்தி அவர்களின் தலைமையில் ஆற்காடு சாலை அண்ணா பொது நல மன்றம் துவங்கி கவரை தெரு பூக்காரன் தெரு வஉசி தெரு சுப்பராய நகர் 1வது தெரு தனசேகரன் தெரு வழியாக வாத்தியார் தோட்டத்தில் முடிகிறது.

132வது வட்டக் கழக செயலாளர் ந.மோ.முரளி தலைமையில் முருகேசன் தெருவில் துவங்கி ரத்தினம்மாள் தெரு காமராஜர் காலனி புலியூர் பகுதியில் முடிகிறது.

132வது(அ) வட்டகழகச் செயலாளர் கே.எஸ் வெல்டிங் ராஜா தலைமையில். கோடம்பாக்கம் மேம்பாலம் கீழே உள்ள கோவிலில் அருகில் இருந்து புறப்பட்டு ஸ்டேஷன் ரோடு சேகர் எம்போரியம் கோபாலன் மேலன் தெரு CRP கார்டன் அஜீஸ் நகர் ரங்கராஜ புரம் 60 குடிசை அனுசியா தெரு வழியாக ஷோபனா திரு மண மண்டபம் அருகில் முடிகிறது.

134வது வட்ட கழகச் செயலாளர் ஆர். சக்திவேல் தலைமையில். பிருந்தாவனம் தெருவில் துவங்கி கணபதி தெரு உமாபதி தெரு ஜூபிலி ரோடு ஆரிய கவுடா சாலை உள்ள வல்லபே விநாயகர் கோயிலில் முடிகிறது.

134வது(அ) வட்ட கழகச் செயலாளர் ஜி பி. செந்தில்குமரன் தலைமையில் வல்லபாய் விநாயகர் கோவில் துவங்கி (ஆரிய கவுடா ரோடு) விவேகானந்தாபுரம் மூர்த்தி தெரு தம்பையா தெரு காந்தி தெரு எல்லையம்மன் கோவில் தெரு வழியாக எரிக்கரை தெருவில் முடிகிறது.

131வது வட்டக் கழகச் செயலாளர் மு.ம. செந்தில்குமார் மணிவண்ணன் தலைமையில் போஸ்டல் காலனியில் 4வது தெருவில் துவங்கி நாயக்கம்மார் தெரு கவரை தெரு 61வது தெரு 7வது அவென்யூ 23வது தெரு 15வது தெருவில் முடிகிறது.

மேற்கண்ட நிகழ்ச்சியில் சிறப்புடன் அமைய தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள் மாவட்டக் கழக நிர்வாகிகள் வட்டக் கழகச் செயலாளர்கள் பகுதி நிர்வாகிகள் மாமன்ற உறுப்பினர்கள் மாவட்ட கழக உறுப்பினர்கள் அனைத்து அணிகளின் மாவட்ட பகுதி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் இளைஞர் அணி மகளிர் அணி சகோதர சகோதரிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டு கொள்ளப்படுகிறது.

இவ்வாறு தியாகராய நகர் மேற்கு பகுதி செயலாளர் கே.ஏழுமலை எம்.சி., கிழக்குப் பகுதி பொறுப்பாளர் கோ.சு. மணி அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.



தியாகராயநகர் சட்டமன்ற தொகுதியில் கழக வேட்பாளராக போட்டியிட்ட ராஜா அன்பழகன் 135, 135–ஆ மற்றும் 130–அ வட்டத்தை சேர்ந்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார். பகுதிக் கழக செயலாளர்கள் கே.ஏழுமலை, கோ.சு.மணி முன்னிலையில் வட்டக் கழகச் செயலாளர்கள் புதூர் லோகு, மு.செல்வகுமார், தட்சன் ஹரிஹரன் ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற நன்றி தெரிவிப்பு நிகழ்வில் வட்ட செயலாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள் அனைத்து அணியினரும், BLA–2 மற்றும் கழகத்தினர் கலந்துகொண்டனர்.

### தி.மு.க. சட்டப் பேரவை கட்சித் தலைவராக உதயநிதி ஸ்டாலின் தேர்வு!

# விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் உளமார்ந்த வாழ்த்துக்கள்!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

விழுப்புரம், மே 13 -

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக துணைப் பொதுச்செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்களின் ஆலோசனைப்படி, விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில், திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதியில் தேர்தல் களப்பணியாற்றிய கழக செயல்வீரர்களுக்கு திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் சார்பில் போட்டியிட்ட விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி தனது மனமார்ந்த நன்றியை தெரிவித்தார். அதோடு கீழ்காணும் மூன்று தீர்மா னங்களை நிறைவேற்றி னார்கள்.

நடந்து முடிந்த தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தலில் கழகத் தலைவர் தளபதி கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்த 1,54,89,500 வாக்காளப் பெருமக்களுக்கும்

திருக்கோவிலூர் கழக தொகுதியில் சட்டமன்ற வேட்பாளராக விழுப்புரம் ( தெற்கு ) மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி ஆகிய என்னை போட்டியிட வாய்ப்பளித்து எனக்காக தீவிர வாக்கு சேகரிப்பிலும் ஈடுபட்ட கழகத் தலைவர் தளபதி அவர்களுக்கும், கழக இளைஞர் அணி செயலாளர் திருமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், கழக துணைப் பொதுச்செயலாளர் முனைவர் க.பொன்முடி அவர்களுக்கும் தீவிர களப்பணியாற்றிய திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதியைச் சேர்ந்த மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி யின் கட்சிகளைச் சேர்ந்த அனைத்து நிர்வாகிகளுக் கும் தோழர்களுக்கும் குறிப்பாக தி.மு.கழகத் தைச் சேர்ந்த மாநில மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர்கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து சார்பு அணி நிர்வாகிகள், BLA2, B D A க்கள், தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள்,

உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள், சமூக பொது நல அமைப்புகள், தன்னார்வு இயக்கங்கள், மகளிர் அமைப்புகள் ஊடகவியல் தோழர்கள் என அனைத்து தரப்பினருக்கும் இந்த கூட்டம் நன்றியை தெரிவித்துக் கொள்வதோடு எனக்கு திருக்கோவிலூர் சட்டப்பேரவை வாக்களித்த தொகுதியின் 62,452 வாக்காளப் பெருமக்களுக்கும் தனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறது, விழுப்புரம் ( தெற்கு) மாவட்ட தி.மு.க. தனது இதயபூர்வான நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.


கழக இளைஞர் அணி செயலாளர் வருங்கால தமிழகத்தை வழி நடத்த இருக்கின்ற பெருமதிப்பிற்குரிய உதயநிதி ஸ்டாலின் அவர்களை தி.மு.கழகத்தின் சட்டப்பேரவை கட்சித் தலைவராக தேர்வு செய்து சட்டப்பேரவை எதிர்கட்சித் தலைவராக பணியாற்றிட வாய்ப்பளித்த கழகத் தலைவர் தளபதி அவர்களுக்கும் கழக பொதுச்செயலாளர் உள்ளிட்ட தலைமைக் கழக நிர்வாகிகளுக் கும் நன்றி தெரிவித்துக்கொள்வதோடு கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு விழுப்புரம் ( தெற்கு) மாவட்ட தி.மு.க. தனது உளமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்து மகிழ்கிறது.

10.05.2026 அன்று நடந்த புதிய அரசின் பதவியேற்பு நிகழ்ச்சியில், ஆண்டாண்டு காலமாக பின்பற்றப்படும் மரபான தமிழ் நாடு அரசின் பாடலான தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கப்படும் தமிழ்நாடு அரசின் நிகழ்ச்சிகளில் இருந்து விலகி மரபுகளை மீறும் வகையில் வந்தே மாதரம் மற்றும் தேசிய கீதத்திற்கு பின்னர் தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்ட செயலை கண்டிப்பதோடு, இது போன்று தமிழ் மொழி மற்றும் தமிழர் உணர்வுகளை சிறுமைப்படுத்தும் செயல்களுக்கு விழுப்புரம் (தெற்கு ) மாவட்ட தி.மு.க. தனது கடுமையான கண்டனங்களை தெரிவித்துக்கொள்கிறது.

உடன் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.என்.முருகன், இரா.கற்பகம், தலைமை செயற்குழு உறுப்பினர் T.செல்வராஜ் , ஒன்றிய செயலாளர்கள் மு.தங்கம், ஜி.ரவிச்சந்திரன், அ.சா.ஏ. பிரபு, பி.வி.ஆர். சு.விசுவநாதன், எஸ்.லூயிஸ், கை.ரா.சடகோபன், கு.தீனதயாளன், நகர செயலாளர் கோபிகிருஷ்ணன், பேரூராட்சி செயலாளர் பூக்கடை கணேசன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அழகு திருநாவுக்கரசு
### மே 13 (2015)



மாணவர் பருவத்தில் காரைக்குடி அழகப்பா கல்லூரியில் பயின்ற போது திராவிட மாணவர் கழக அமைப்பாளராக செயல்பட்டதுடன் தமிழகம் முழுவதும் கல்லூரிகளுக்கு சென்று திராவிட மாணவர் கழக அமைப்புகளை உருவாக்கியவர்.

கழக விவசாய தொழிலாளர் அணியின் செயலாளராக இருந்தார். தஞ்சை மற்றும் திருவாரூர் மாவட்ட பகுதிகளில் அவர் செய்த பொதுச் சேவைகள் மூலம் மக்களிடம் நிரந்தர செல்வாக்கு பெற்றவராக விளங்கினார்.

தலைவர் கலைஞர் மற்றும் தளபதி அன்பை பெற்றவராக திகழ்ந்தார். இறுதிநாள் வரை தந்தை பெரியார் அவர்களின் பகுத்தறிவு மற்றும் சீர்திருத்தக் கொள்கைகளை ஏற்று சுயமரியாதைக்காரராக வாழ்ந்து மறைந்தார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**


## 30-ஆம் ஆண்டு
# நினைவு அஞ்சலி



*பொதுவுடமை தந்த புத்துயிர்ப்பு...*
*பொழுதளந்த திராவிடத்தில் உயிர்துடிப்பு!!!*
*போற்றும்படி வாழ்ந்த போர்முனைப்பு...*
*பூமி தந்த அவரே தனிப்பிறப்பு...*
*நூறாண்டு கடந்த நூல் மதிப்பு...*

திரு **A.K.சுப்பையா**, EX MLA.,
தோற்றம் : 03.04.1920 ● மறைவு : 13.05.1996

நீங்கா நினைவுகளுடன்...

**குடும்பத்தினர்கள் மற்றும்**
**கழக தோழர்கள்**

பாலன் டிஜிட்டல் திட்டச்சேரி - 9865787764